## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$

........................................................................

........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$

........................................................................

........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$

........................................................................

........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2018 ஆகஸ்ட்

46 - இந்துநாகரிகம் II

புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

பகுதி I

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

பகுதி II

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

மொத்தம் 05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி கணக்கிடல்

| | | |
|---|---|---|
| பத்திரம் I க்கு | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II க்கு | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளிகள் | - | 200 / 2 புள்ளிகள் = 100 புள்ளிகள் |

# இந்து நாகரிகம்
## வினாத்தாள் I
### வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

முதலாம் வினாத்தாளின் குறிக்கோள் இந்து நாகரிகப் பாடத்திட்டம் தொடர்பான அடிப்படை அறிவை மாணவர்கள் அடைந்துள்ளனரா? என்பதைப் பரீட்சித்துப் பார்த்தலும் இதன் மூலம் மாணவர்களின் நினைவாற்றலை அளவிடுதலுமாகும்.

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

இந்து நாகரிகம் I
Hindu Civilization I

**46 T I**

08.08.2018 / 0830 - 1030

இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. இருக்கு வேதத்தில் காணப்படும் சூக்தங்களின் எண்ணிக்கை யாது ?
(1) 1028 (2) 1050 (3) 1350 (4) 2010 (5) 2018

2. யாகக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது
(1) இருக்கு வேதம் (2) அதர்வ வேதம் (3) யசுர் வேதம்
(4) சாம வேதம் (5) ஆயுர் வேதம்

3. வேதங்களில் குறிப்பிடப்படும் தெய்வங்களின் பெயர்கள் மாத்திரம் அடங்கிய தொகுதி யாது ?
(1) இந்திரன், விஷ்ணு, துர்க்கை (2) அக்கினி, வருணன், உருத்திரன்
(3) உருத்திரன், சாவித்திரி, வருணன் (4) உஷை, பூஷன், வைரவர்
(5) சிவன், வருணன், சப்தமாதர்

4. 'அபௌருஷேயம்' என்பதன் பொருள் யாது ?
(1) எழுத்தில் பொறிக்கப்படாதது.
(2) வாயால் ஓதி செவியால் கேட்கப்பட்டு வந்தது.
(3) அறிவுக் களஞ்சியமாக விளங்குவது.
(4) மனிதனால் ஆக்கப்படாது, தெய்விகம் வாய்ந்தது.
(5) ரிஷிகளால் ஆக்கப்பட்டது.

5. அற்புதத் திருவந்தாதியைப் பாடியவர்
(1) சேந்தனார் (2) காரைக்காலம்மையார் (3) வேணாட்டடிகள்
(4) கண்டராதித்தர் (5) நம்பியாண்டார் நம்பி

6. இறைவனைத் தோழமை உறவின் மூலம் வழிபட்ட நாயனார்
(1) சிறுத்தொண்டர் (2) கண்ணப்பர் (3) பூசலார்
(4) சுந்தரர் (5) சேரமான் பெருமாள்

7. சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைய அமைக்கப்படும் மூன்று வகையான விக்கிரகங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) அமைதி விக்கிரகம், அருள் விக்கிரகம், அசல விக்கிரகம்
(2) சித்திரம், சித்திரார்த்தம், சித்திராபாசம்
(3) சல விக்கிரகம், அசல விக்கிரகம், சலாசல விக்கிரகம்
(4) சிவலிங்கம், கணபதி விக்கிரகம், முருகன் விக்கிரகம்
(5) தட்சணாமூர்த்தி விக்கிரகம், அருள் விக்கிரகம், அகோர விக்கிரகம்

8. இராஜசிம்ம பல்லவேஸ்வரம் என அழைக்கப்பட்ட கோயில்
(1) மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் (2) திருச்சி குடைவரைக் கோயில்
(3) காஞ்சி கைலாசநாதர் கோயில் (4) பனைமலைக் கோயில்
(5) தர்மராஜரதக் கோயில்

9. சங்க இலக்கியங்களில் பாலை நிலத் தெய்வமாகப் போற்றப்படுபவர்
(1) விஷ்ணு (2) கொற்றவை (3) இந்திரன்
(4) முருகன் (5) வருணன்

10. மகேந்திர வர்மனால் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்ட இடங்களின் பெயர்கள் மாத்திரம் அடங்கிய தொகுதி
(1) தஞ்சை, காஞ்சி, திருத்தணி (2) மண்டகப்பட்டு, மாமண்டூர், வல்லம்
(3) மாமண்டூர், மதுரா, வல்லம் (4) திருச்சிராப்பள்ளி, தஞ்சை, மாமண்டூர்
(5) மதுரா, கன்னோசி, மாமல்லபுரம்

11. தமிழ்நாட்டில் சிறந்த வார்ப்பு விக்கிரகங்கள் படைக்கப்பட்ட காலம்
(1) சோழர் காலம் (2) பாண்டியர் காலம் (3) சங்க காலம்
(4) பல்லவர் காலம் (5) விஜயநகர நாயக்கர் காலம்

12. இறைவன், இறைவனது அவதாரம், வீரர்கள் நிகழ்த்திய வீரச் செயல்கள், நீதிநெறிகள் ஆகியவற்றை விபரிக்கும் நூல்
(1) திருமந்திரம் (2) தந்திரங்கள் (3) இதிகாசங்கள்
(4) சௌந்தர்யலஹரி (5) திருமுறைகள்

13. சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நூல்
(1) மனுஸ்மிருதி (2) இராமாயணம் (3) சாகுந்தலம்
(4) அதர்வ வேதம் (5) இருக்கு வேதம்

14. வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாகப் போற்றப்பட்ட சிவனது 'நமச்சிவாய' என்ற மந்திரம் முதன் முதலில் இடம்பெற்ற நூல்
(1) மகாபாரத பகவத்கீதை (2) யசுர்வேத சதருத்திரியம்
(3) இராமாயண யோகவாசிஷ்டம் (4) பதஞ்சலி யோகசூத்திரம்
(5) காளிதாசரது குமாரசம்பவம்

15. தமிழகத்தில் தீயின் அம்சமாக சிவபெருமானை வழிபடும் திருத்தலம்
(1) திருவையாறு (2) சிதம்பரம் (3) திருக்காளத்தி
(4) திருவண்ணாமலை (5) திருக்கடவூர்

16. திருமாலுடைய மூர்த்தி பேதங்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) வியூகம், விந்து, அர்ச்சை (2) பரம், வியூகம், அந்தர்யாமி
(3) பரம், நாதம், வியூகம் (4) விபவம், கலை, அந்தர்யாமி
(5) வியூகம், விபவம், விந்து

17. சைவ சமய மரபின்படி இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்ததன் நோக்கமாவது
(1) உலக வாழ்வை நடத்துதல் ஆகும்.
(2) கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல் ஆகும்.
(3) குடும்பத்துடன் இன்பமாக வாழ்தல் ஆகும்.
(4) கல்வியில் மேனிலை அடைதல் ஆகும்.
(5) உடற்பயிற்சியின் மூலம் உடலைப் பேணுதல் ஆகும்.

18. தஞ்சை பெரிய கோயிலின் மறுபெயர்
(1) ஏகாம்பரேஸ்வரர் கோயில் (2) பிருகதீஸ்வரர் கோயில்
(3) கைலாசநாதர் கோயில் (4) தோணிபுரத்தீசர் கோயில்
(5) திருவீரட்டானேஸ்வரர் கோயில்

19. கோயிற் கட்டடக்கலை பற்றிக் கூறும் நூல்
(1) வாஸ்து சாஸ்திரம் (2) கல்ப சூத்திரம் (3) பக்தி சூத்திரம்
(4) சூத்தநூல் (5) சிரௌத சூத்திரம்

20. "உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக் கிளியில் உருவெழுதி..." என்ற பாடல் வழியாக, கலைகள் கொண்டுள்ள பண்புகளைப் போற்றியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
(4) மாணிக்கவாசகர் (5) சுவாமி விபுலானந்தர்

21. இந்து தத்துவ உண்மைகளை உபநிடதங்கள் வெளிப்படுத்தும் முறைகளை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) உரையாடல், செய்முறை, பஜனை (2) விரிவுரை, விவாதம், பாவனை
(3) விவாதம், செய்முறை, உரையாடல் (4) உரையாடல், விசாரம், பாவனை
(5) செய்முறை, தியானம், பாவனை

22. சிவாகமங்களுள் மூன்றை உள்ளடக்கிய தொகுதி
(1) சுப்பிரபேதம், வாதுளம், பாஞ்சராத்திரம்
(2) பாரமேசுவரம், கிரணம், வைகானஸம்
(3) தீப்தம், சூக்குமம், குருகீதை
(4) காரணம், காமிகம், சுப்பிரபேதம்
(5) சகஸ்ரம், வைகானஸம், மிருகேந்திரம்

23. சிவாகமங்கள் கூறும் கிரியைகளுள் 'கர்ஷணம்' என்ற கிரியை எதனைக் குறித்து நிற்கிறது ?
(1) விக்கிரகங்களை உருவாக்கும் முறைகளையாகும்.
(2) ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை உழுது பண்படுத்துதலையாகும்.
(3) ஆலயங்களுக்கான கட்டட அமைப்பு முறையையாகும்.
(4) ஆலயத்தில் நிகழும் திருவுருவ வழிபாடுகளையாகும்.
(5) ஆலயத்தில் நிகழும் தேர்த்திருவிழாவையாகும்.

24. இறைவனது எண் குணங்களில் மூன்றினை உள்ளடக்கிய தொகுதி
(1) எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், விக்கிரக வடிவில் விளங்குபவர்
(2) தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், முற்றும் உணர்தல்
(3) பந்தமும் வீடும் படைப்பவர், மலநாசம் செய்பவர், பாசங்களிலிருந்து நீங்கியவர்
(4) இயற்கை உணர்வினன், அருள்பாலிப்பவர், ஓசை ஒலியாக விளங்குபவர்
(5) ஆனந்த அனுபவமானவர், முற்றுணர்வுடையவர், பேரருளாளர்

25. 'கேவலாத்வைதம்' என்ற தத்துவக் கொள்கையை விளக்கியவர்
(1) நிம்பார்க்கர் (2) வல்லபர் (3) சங்கரர்
(4) ஸ்ரீ சைதன்யர் (5) இராமானுஜர்

26. கர்மயோகிக்கு கீதை ஆசிரியர் கொடுக்கும் சிறப்புப் பெயர்
(1) இராஜயோகி (2) ஸ்திதப்பிரக்ஞன் (3) ஞானி
(4) சித்தன் (5) பண்டிதன்

27. அவைதிக சமயங்கள் எனச் சுட்டப்படுபவை
(1) வேதத்தை மட்டும் ஏற்றுக்கொள்பவை
(2) வேதத்தை ஏற்று ஆகமத்தை ஏற்காதவை
(3) வேதத்தை அவ்வப்போது ஏற்றுக்கொள்பவை
(4) வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவை
(5) ஆகமத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்பவை

28. தர்ம சாத்திர நூலாசிரியர்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) மனு, வசிஷ்டர், வான்மீகி (2) கௌடில்யர், பராசரர், காளிதாசர்
(3) பராசரர், வசிஷ்டர், வியாசர் (4) காளிதாசர், மனு, வான்மீகி
(5) மனு, பராசரர், நாரதர்

29. "பிரபத்தியைக் கைக்கொள்வதன் மூலம் முத்தியடையலாம்" எனக் குறிப்பிட்டவர்
(1) இராமானுஜர் (2) சங்கரர் (3) மத்துவர்
(4) ரமணர் (5) தாயுமானவர்

30. சைவசித்தாந்தத்தில் குணங்குறிகளுடனான இறைவனது இயல்பைச் சுட்டும் சொல்
(1) அநாதி (2) சொரூபம் (3) அவதாரம்
(4) தடத்தம் (5) விமர்சனம்

31. பஞ்சாங்கத்தில் உள்ளடங்குகின்ற முக்கிய ஐந்து உறுப்புகளைக் கொண்ட தொகுதி
(1) வருஷம், வாரம், மாதம், யோகம், நட்சத்திரம்
(2) நட்சத்திரம், வாரம், சாதகம், மாதம், கரணம்
(3) வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்
(4) வசந்தம், வருஷம், திதி, இராசி, கரணம்
(5) யோகம், மாதம், சுக்கிரநாடி, கௌசிகநாடி, ராகுகாலம்

32. இந்துக்களின் அரசியல், பொருளாதாரக் கொள்கை பற்றி எடுத்துக்கூறும் நூல்
(1) ஞானாமிர்தம் (2) கைவல்ய நவநீதம் (3) பராசரஸ்மிருதி
(4) மனுதர்ம சாஸ்திரம் (5) அர்த்தசாஸ்திரம்

33. "உன்னுடைய உரிமை நீ செய்யும் காரியம் மட்டுமே; காரியத்தின் பயனும் முடிவும் உனது உரிமை அல்லவே அல்ல" என அறிவுரை வழங்கும் நூல்
(1) அர்த்தசாஸ்திரம் (2) சுக்கிரநீதி (3) யோகசாஸ்திரம்
(4) பகவத்கீதை (5) மானசாரம்

34. மெய்கண்டதேவருடைய முதன்மைச் சீடர்
(1) அருணந்தி சிவாச்சாரியார் (2) திருக்கடவூர் உய்யவந்த தேவர்
(3) மனவாசகம் கடந்த தேவர் (4) உமாபதி சிவாச்சாரியார்
(5) மறைஞான சம்பந்தர்

35. சைவசித்தாந்தத்தில் பாசம் குறிக்கும் மூன்று விடயங்களைக் கொண்ட தொகுதி
(1) கன்மம், மாயேயம், வியாபகம் (2) பதி, பசு, பாசம்
(3) திரோதாயி, மாயேயம், மலம் (4) ஆணவம், கன்மம், மாயை
(5) ஆணவம், கன்மம், பசுத்துவம்

● மேல்வரும் பகுதிகளிலே தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>உலகநீதி | B<br>ஹவாய் | C<br>மகாபலிபுரம் | D<br>திருமுறைகள் | E<br>பிரமாண தீபிகை |
| F<br>நம்பியாண்டார் நம்பி | G<br>எலோரா | H<br>ஞானப்பிரகாச முனிவர் | I<br>சிவசுப்பிரமணிய சுவாமிகள் | J<br>நீதி வெண்பா |

36. சிவனது வீரச் செயல்களைக் குறிப்பிடும் சிற்பங்கள் காணப்படும் இடங்களைக் குறிக்கும் சோடி
(1) A G (2) B H (3) C G (4) E J (5) F G

37. இலங்கையில் வளம்பெற்ற சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியலோடு தொடர்புடைய சோடி
(1) A J (2) B H (3) D F (4) E H (5) H J

38. தமிழகத்தில் விஜய நகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில் எழுந்த அறநூல்களைக் குறிக்கும் சோடி
(1) A I (2) A J (3) B H (4) C G (5) D F

39. அமெரிக்க நாட்டில் நிலவும் இந்து சமயத்துடன் தொடர்புடைய சோடி
(1) A J (2) B H (3) B I (4) D I (5) E H

40. தமிழகத்தில் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சியோடு தொடர்புடைய சோடி
(1) A G (2) C G (3) D F (4) D I (5) H I

- 41 தொடக்கம் 45 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.

41. இந்து நாகரிகத்தின் தனித்துவமும் சிறப்பும்
(1) உலக நாகரிகங்களின் வரிசையில் இந்து நாகரிகம் புகழ் பெற்றது.
(2) இந்து நாகரிகத்தின் தொன்மைக்கு வேத இலக்கியங்களே சான்றாகும்.
(3) இந்து நாகரிகம் சமயம், தத்துவம், கலை, சமூகம், அறிவியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய சிறப்புடையது.
(4) இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்களின் அரசியல் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகும்.
(5) இந்து நாகரிகம் திருக்கோயில் பண்பாட்டின் சிறப்பினைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

42. சிந்துவெளி நாகரிகம் ஒரு நதிக்கரை நாகரிகம்
(1) சிந்துவெளிப் பிரதேசம் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களை உள்ளடக்கியது.
(2) இங்கு சேர். ஜோன் மார்ஷல் தலைமையில் புதைபொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.
(3) இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் மூலம் அக்கால மக்கள் இந்து தெய்வங்களை வழிபட்டமை உறுதிப்படுத்தப்படுகிறது.
(4) சைவசமயம் சார்புடைய சிவ வழிபாடு சிறப்பாக இடம்பெற்றதை முத்திரைகள் காட்டி நிற்பதாக அறிஞர் கருதுவர்.
(5) சிந்து வெளிப் பிரதேசத்தில் கட்டடக்கலை சிறப்புற்றவிடத்தும் ஏனைய கலைகளின் வளர்ச்சி மிகவும் குறைவாகும் என அறிஞர் கருதுகின்றனர்.

43. முருக வழிபாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அருணகிரிநாதர்
(1) அருணகிரிநாதர் தமிழகத்தில் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் முருக வழிபாட்டிற்குப் பெருமை சேர்த்தவர்.
(2) அவரது திருப்புகழ் சந்தப் பாக்கள் மக்கள் மத்தியில் முருக பக்தியை எழுச்சி பெறச்செய்தன.
(3) முருகப் பெருமான் அவருக்கு நயன தீட்சையும் திருவடி தீட்சையும் வழங்கி அருளினார்.
(4) இவர் இளமையிற் கல்வியறிவு பெறுவதில் நாட்டம் கொண்டிருக்கவில்லை.
(5) முருகப் பெருமான் மீது இவர் பாடிய கந்தரனுபூதி படிப்போர் உள்ளத்தில் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தவல்லது.

44. இந்து நாகரிக வரலாற்றில் சிறப்புப் பெறும் இந்து மருத்துவம்
(1) இந்து நாகரிக வரலாற்றில் சிறப்புப் பெற்ற அறிவியற் சிந்தனைகளில் மருத்துவம் மேன்மையானது.
(2) இருக்கு வேதம் மருத்துவத்தோடு தொடர்புடைய வாதம், பித்தம், கபம் என்பன பற்றிக் குறிப்பிடுகிறது.
(3) யசுர் வேதத்தில் இதய நோய், காச நோய், குஷ்டம் போன்றவற்றைத் தீர்க்கக்கூடிய மந்திரங்கள் உள்ளன.
(4) இந்து மருத்துவ நூல்களின் வளர்ச்சிக்கு உதவியோர் பற்றியும் மருத்துவ நூல்கள் பற்றியும் அறிய முடியவில்லை.
(5) இந்து மருத்துவத்தில் யோகம், தியானம் என்பனவும் நோய் வராது காக்கவல்லன.

45. சிவனது இலிங்கோற்பவ மூர்த்தத்தின் சிறப்பு
(1) 'இலிங்கோற்பவம்' என்ற பெயர் லிங்கத்தினுள் இடம்பெறும் தோற்றம் என்ற பொருளைத் தரும்.
(2) சிவனது இம்மூர்த்தம் சிவாலயங்களில் கருவறையின் தெற்குத் திசைச் சுவரின் புறத்தேயுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் இடம்பெறும்.
(3) இம்மூர்த்தம் விஷ்ணுவும் பிரமனும் சிவனது சோதிப்பிழம்பின் அடிமுடி தேடிய புராணக் கதையுடன் தொடர்புபட்டது.
(4) மூர்த்தத்தின் வலப்புறத்தில் மேலே பறக்கும் அன்னமும் இடப்புறத்தில் கீழே பன்றியும் இடம்பெறும்.
(5) இலிங்கோற்ப மூர்த்தம் சிவனே முழுமுதற் கடவுள் என்ற தத்துவத்தை உணர்த்தும்.

● 46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றை **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>சிவன் திரிபுரம் எரித்த கதை | **F**<br>இசைப் பாடல்கள் மூலம் பக்தி இயக்கத்தை வளர்படுத்தியமை | **K**<br>சிவதொண்டன் பத்திரிகை | **P**<br>அஜந்தா |
| **B**<br>முன்னேச்சரம் | **G**<br>நடனப் பெண்களின் லாவண்யம் | **L**<br>இராமர் பட்டாபிஷேகம் | **Q**<br>தத்துவ ஆராய்ச்சியை உன்னத நிலைக்கு உயர்த்தியது |
| **C**<br>பாமர மக்களிடத்தில் சமயப் பற்றை ஏற்படுத்தியமை | **H**<br>கதாப்பிரசங்க மரபு வளர்ச்சிபெற்றமை | **M**<br>இதிகாச புராண கதைகளைத் தொடர்புபடுத்தி பாடல்கள் பாடியமை | **R**<br>எண் குணங்களைக் கொண்டது |
| **D**<br>உயிரின் குற்றமாக விளங்குவது | **I**<br>உபநிடதக் கருத்தை எளிதில் அறிய உதவுவது | **N**<br>இருளிலும் கொடியது | **S**<br>நாட்டுக்கோட்டை நகரத்தார் பணி |
| **E**<br>பிரமம் ஆகிய பரம்பொருளை விளக்குவது | **J**<br>அளவற்ற சக்திகளை உடையது | **O**<br>பாதராயணர் | **T**<br>சமயப் பிரசாரத்தில் இசைப் பாடல்களைப் பயன்படுத்தியமை |

**46.** இந்து ஓவியக் கலையோடு தொடர்புடைய தொகுதி
(1) AGLP (2) BFMT (3) CFMT (4) DJNR (5) EIOR

**47.** இலங்கையில் இந்துக்களது சமய, சமூக வளர்ச்சியோடு தொடர்புடைய தொகுதி
(1) AFKQ (2) BHKS (3) CHKS (4) DIOR (5) EJNR

**48.** தமிழகத்தில் ஆழ்வார்களது சமயப் பணி தொடர்பான விடயங்களைக் கொண்ட தொகுதி
(1) AFMT (2) BGKS (3) CFMT (4) DJOR (5) EHLR

**49.** பிரம சூத்திரத்தின் சிறப்பம்சங்களைக் குறிக்கும் தொகுதி
(1) AJOR (2) BFMT (3) CINQ (4) DINR (5) EIOQ

**50.** சைவசித்தாந்தம் கூறும் ஆணவத்தோடு தொடர்புடைய தொகுதி
(1) AHKP (2) CFMT (3) DGNT (4) DJNR (5) EFMQ

* * *

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அந்தரங்கமானது

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: **46**

විෂය / பாடம்: **இந்து நாகரிகம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 3 | 31. | 3 | 41. | 4 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 4 | 32. | 5 | 42. | 5 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 2 | 33. | 4 | 43. | 4 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 | 44. | 4 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 3 | 35. | 4 | 45. | 2 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 2 | 36. | 3 | 46. | 1 |
| 07. | 3 | 17. | 2 | 27. | 4 | 37. | 4 | 47. | 2 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 5 | 38. | 2 | 48. | 3 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 1 | 39. | 3 | 49. | 5 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 4 | 40. | 3 | 50. | 4 |

◎ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

# இந்து நாகரிகம்

## வினாத்தாள் II

### வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

1. பாடசாலைகளில் பயனுறுதிமிக்க கற்றல் - கற்பித்தல் பற்றிய செயற்பாட்டின் பயன்பாட்டை இவ்வினாத்தாள் மூலம் மதிப்பீடு செய்தல்.

2. இந்து நாகரிகம் தொடர்பான பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களிலே மாணவர்களின் அடைவு மட்டத்தினைப் பரீட்சித்தல்.

3. இந்துப்பண்பாட்டு விழுமியங்களை நடைமுறை வாழ்வில் கைக்கொள்ளக் கூடியவர்களாகத் தமது அறிவுத் திறனைப் பெற்றுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

4. இந்து நாகரிகம் தொடர்பான விடயங்களைக் கற்று தத்தமது ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய தகுதியுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

5. இப்பாடத்தில் அடங்கியுள்ள விடயங்களைச் சமூக விருத்திக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் எவ்வெவ் வகைகளில் பயன்படுத்தக்கூடிய அறிவுத் திறன் பெற்றுள்ளனர் என்பதைப் பரீட்சித்தல்.

6. மாணவர்கள் தேசிய மட்டத்திற்குரிய தகுதியைப் பெற்றுனள்ளனரா? என்பதைப் பரீட்சித்தலும் இதன் நோக்கமாகும்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

2018.08.07 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) புராணங்களின் ஐவகை இலட்சணங்கள்

(ஆ) புராணங்களின் வகைகள்

(இ) புராணங்கள் சித்திரிக்கும் வழிபாட்டு முறைகள்

**2.** தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவ பக்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

(அ) அரசர்களின் பங்கும் பணியும்

(ஆ) நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்

(இ) திருக்கோயில் வழிபாடு

**3.** இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிவரும் பணிகள் பற்றிப் பரிசீலிக்குக.

(அ) சைவ பரிபாலன சபை

(ஆ) சைவ வித்தியா விருத்திச் சங்கம்

(இ) அகில இலங்கை இந்து மாமன்றம்

## பகுதி II

**4.** "உபநிடதங்கள் இந்து தத்துவ வளர்ச்சியின் கருவூலங்கள்" என்பதனை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) உபநிடதங்கள் எழுந்த காலச் சூழல்

(ஆ) உபநிடத மகா வாக்கியங்கள்

(இ) இந்து தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்களிப்பு

**5.** சோழர் காலத்தில் ஏற்பட்ட கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விவரிக்குக.

(அ) சோழப் பெருமன்னரின் பங்கும் பணியும்

(ஆ) கோயிற் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள்

(இ) சிற்பங்கள்

**6.** "ஈழத்துச் சைவ சமய வளர்ச்சியில் சைவப் பெரியார்களாகிய காசிவாசி செந்திநாதையரினதும் சுவாமி விபுலானந்தரினதும் பணிகள் அளப்பரியவை." ஆராய்க.

**7.** தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம் வளம்பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

(அ) இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்கள்

(ஆ) சமய வளர்ச்சி

(இ) கலைகள்

(ஈ) இலக்கியங்கள்

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(அ) கதிர்காமம்

(ஆ) விஷ்ணுவின் அவதார தத்துவம்

(இ) குப்தர் காலக் கலைகள்

(ஈ) சைவசித்தாந்த தத்துவத்தின் தனித்துவமும் சிறப்பும்

(உ) குருகுலக் கல்வி

(ஊ) கண்ணகி வழிபாடு

* * *

# 46 - இந்துநாகரிகம் II

## பகுதி I

01. **இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல் வரும் தலைப்புகளில் ஆராய்க.**

அ) புராணங்களின் ஐவகை இலட்சணங்கள்

ஆ) புராணங்களின் வகைகள்

இ) புராணங்கள் சித்திரிக்கும் வழிபாட்டு முறைகள்

**அ) புராணங்களின் ஐவகை இலட்சணங்கள்**

இந்து நாகரிகத்தின் பல்வேறு அம்சங்களை அறிவதற்குத் துணைபுரியும் இலக்கியங்களின் வரிசையில் பதினெண் புராணங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. வேதங்களையடுத்து முக்கியத்துவம் பெறுபவை புராணங்களே எனில் மிகையில்லை. புராணங்கள் தரும் விடயங்களைக் கருத்திற்கொண்டால் அவை கலைக் களஞ்சியம் போல் சிறப்புப் பெறுகின்றன. புராணம் என்பது "புராதன காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவது" என்ற பொருளைத் தருவதாகவுள்ளது. 'கடந்தகால நிகழ்வுகளின் பதிவேடு' என்ற பொருளிலும் புராணம் என்ற சொல் விளக்கம் பெறுகின்றது. புராணங்களுக்கு ஐவகைப் பண்புகள் கூறப்படுகின்றன. இவை பஞ்ச இலட்சணங்கள் என்ற வகையில் ஐவகை இலட்சணங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன

1. சர்க்கம் – படைப்பு
2. பிரதி சர்க்கம் – மீள் படைப்பு
3. வம்சம் – வம்ச பரம்பரை
4. மன்வந்தரம் – மனுக்களின் காலம்
5. வம்சானு சரிதம் – வம்சங்களின் வரலாறு

மேலும் புராணங்களுக்கு தசலட்சணங்களும் உண்டு எனவும் குறிப்பிடப் படுகின்றது. இந்து நாகரிகத்தின் கருவூலங்களாக முக்கியத்துவம் பெறும் புராணங்கள் வடமொழியில் உள்ளன.

(05 புள்ளிகள்)

**ஆ) புராணங்களின் வகைகள்**

மரபுவழிக் கருத்தின்படி பதினெண் மகாபுராணங்களுக்கு அடுத்த வகையாக உப புராணங்கள் பதினெண் எண்ணிக்கையில் உள்ளன. உப புராணங்கள் காலத்தால் பிற்பட்டவை. இந்து நாகரிகம் சார்ந்த பல்வேறு அம்சங்களை விளக்கி நிற்கின்றன. புராணங்கள் போற்றிக் கூறும் கடவுளர்களுக்கேற்ப அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவை சாத்துவிக, ராஜஸ, தாமஸ, புராணங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன. ஸ்கந்த புராணத்தின் படி பத்துப் புராணங்கள் சிவனது மகிமைகளையும் தெய்வீகச் சிறப்புகளையும் கூறுகின்றன. அஷ்டமூர்த்தி என்ற சிறப்புப் பெயரை புராணங்கள் சிவனுக்கு வழங்கியுள்ளன. பிரமனது தெய்வீகச் சிறப்புக்களை இரண்டு புராணங்கள் கூறுவன. நான்கு புராணங்கள் விஷ்ணுவின் தெய்வீகப் பெருமைகளைப் போற்றுகின்றன. அவை வகைப்படுத்தப்பட்ட முறை பின்வருமாறு.

(அ) பிரமன் : பிரம, பத்ம புராணங்கள்

(ஆ) சூரியன் : பிரம வைவர்த்த புராணம்

(இ) அக்கினி: அக்கினி புராணம்

(ஈ) சிவன் : சிவ, ஸ்கந்த, லிங்க, கூர்ம வாமன, வராக பவிஷ்ய, மத்ஸ்ய, மார்க்கண்டேய, பிரமாண்ட புராணங்கள் உள்ளிட்ட 10 புராணங்கள்.

(உ) விஷ்ணு : நாரத, பாகவத, கருட, விஷ்ணு புராணங்கள்.

இப்புராணங்களின் செல்வாக்குத் தென்னாட்டுச் சமய மரபிலும் பிரதிபலித்தது. இப்புராண மரபை அடியொற்றி எண்ணற்ற தல புராணங்கள் எழுச்சி பெற்றுப் புராணங்களின் வரிசையில் இடம் பெறலாயின. சிவனது அட்ட வீரட்டானங்களைக் கூறும் புராண தெய்வீக வரலாற்றுடன் தொடர்புடைய இடங்கள் தென்னாட்டில் பல தலங்களாகச் சிறப்படைந்துள்ளன.

வடமொழிப் புராண மரபுகள் தமிழ் நாட்டுச் சமயத்தில் ஏற்படுத்திய செல்வாக்கினால் அம்மரபை அடியொற்றிக் கந்தபுராணம் கந்தனது தெய்வீகப் பெருமைகளைக் கூறும் வகையில் கச்சியப்ப சிவாச்சாரியாரினால் உருவாக்கப்பட்டது. "புராண நன்னாயகம்" எனக் கந்தபுராணம் போற்றப்பட்டமை தென்னாட்டுப் புராண மரபிற்குச் சிறந்த எடுத்துக் காட்டு.
இதே வரிசையில் சிவனடியார் பெருமை கூறும் பெரிய புராணம் மற்றும் திருவிளையாடற் புராணம் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. மற்றும் மகாத்மியங்களும் குறிப்பிடத்தக்கன.

(07 புள்ளிகள்)

**(இ) புராணங்கள் சித்திரிக்கும் வழிபாட்டு முறைகள்**

புராணங்கள் சித்திரிக்கும் வழிபாட்டு முறைகளில் கோயில் வழிபாடும் திருவுருவ வழிபாடும் சிறப்புடையன. புராணங்கள் கூறும் தெய்வீக வரலாற்றின் அடிப்படையில் சிவனுக்குப் பல ஆலயங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் காலந்தோறும் எழுச்சி பெற்று மக்களது வழிபாட்டிற்குரிய இடங்களாகச் சிறப்படைந்தன. கடவுளர்க்கான வழிபாட்டு முறைகள் புராணமரபில் சிறப்படைந்தன. இறைவனைப் பல்வேறு நாமங்களால் வழிபடும் அஷ்டோத்திர நாமவளி, சகஸ்ர நாமவளி போன்றன முக்கியத்துவம் பெற்றன.

புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளுக்கேற்ப ஆலயங்களில் விழாக்கள் இடம்பெற்றதுடன் மக்கள் வழிபட்டுப் பயனடைந்தனர். சிவனது அட்டவீரட்ட புராணக்கதைகள் உதாரணமாக யமசங்ஹாரம். விநாயக புராணத்துடன் தொடர்புடைய கஜமுக சம்ஹாரம், கந்தனது புராணத்துடன் தொடர்புடைய சூரசம்ஹாரம் போன்றன குறிப்பிடற்பாலன.
சிவராத்திரி விரதம், திருக்கார்த்திகை விரதம் ஆகியவற்றுடன் தொடர்புடைய புராணங்களுக்கேற்ப விழாக்கள் ஆலயங்களில் இடம்பெற்றன.
தானம், விரதம், பக்தி, யோகம், தலயாத்திரை, தவம், மூர்த்தி தல தீர்த்தம், தோத்திர மரபு புராணங்கள் கூறும் வழிபாட்டு மரபிற்கு வழிவகுத்தன.
பக்தி மரபு சிறக்கப் புராணங்கள் பெரிதும் உதவின.
புராணக் கதைகளின் அடிப்படையில் எழுந்த திருமுறைகள், திவ்விய பிரபந்தம் ஆகியவை பக்தி மரபு மூலங்களாயின.
பஞ்ச பூதத் தலங்களில் வழிபாடு, விஷ்ணுவின் அவதாரங்களுடன் தொடர்புடைய ஆலய வழிபாடு போன்ற வழிபாட்டு மரபுகள் சிறப்படைந்தன. புராண படன மரபு சிறப்படைந்தது.
புராணங்கள் கூறும் வழிபாட்டு முறைகளின் பயனாய் அறநெறி , ஒழுக்க நெறி, கடவுள் வழிபாடு போன்றவை சமய மரபில் சிறப்படைந்தன.

(08 புள்ளிகள்)

(05+07+08 = 20 புள்ளிகள்)

02. **தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவ பக்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.**

(அ) அரசர்களின் பங்கும் பணியும்
(ஆ) நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்
(இ) திருக்கோயில் வழிபாடு

(அ) அரசர்களின் பங்கும் பணியும்

பல்லவ மன்னர்கள் சைவநெறியைத் தமது அரசநெறியுடன் இணைத்துச் சைவபக்தி இயக்கத்திற்கு உறுதுணையாக விளங்கினர். சைவ சமய கலாசார மரபை வளர்த்தனர் சைவ ஆலயங்களை அழிக்க முடியாத கருங்கற்களைக் கொண்டு உருவாக்கிச் சைவபக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவினர். தொன்மை மிகு சைவ சமயம் தமிழகத்தில் பல்லவர்காலத்தில் உன்னத வளர்ச்சியடைய, அக்கால அரசர்களது பங்கும் பணியும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடற்பாலது.

கி.பி. 575 தொடக்கம் கி.பி. 850 வரையிலான காலம் தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக்காலமாகும்.
அரசர்கள் சைவ விருதுகளைப் பெற்றுக் கொண்டனர் நந்திக் கொடி அரச சின்னமாகவும் சைவசமயச் சின்னமாகவும் சிறப்படைந்தது.
அரசர்கள் சைவ சமயத்திற்கு மாறினர். மன்னர்களின் வழி மக்களும் சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டனர்.

வடமொழி மரபுகள் தமிழகத்தில் கலந்தன. இதன் பயனாக ஆகம மரபிலான வழிபாட்டு முறைகள் ஆலயங்களில் இடம்பெற்றன. இரண்டாம் இராஜசிம்மன் காலம் சைவசமயத்தைப் பொறுத்த மட்டில் (கி.பி. 700 கி.பி.728) ஆகம மரபு பேணப்பட்ட காலம். இம்மன்னன் சிறந்த சிவபக்தன் காஞ்சி கைலாச நாதர் கோயில் உட்பட ப் பல கோயில்களை எழுப்பியவன். இவன் வெளிப்படுத்திய கல்வெட்டுக்கள் மூலம் இவனுக்கு வழங்கப்பட்ட விருதுப் பெயர்கள் இவனது சமயஉணர்வை வெளிப்படுத்துவன. ஆகமங்களைப் பிரதானமாக ஏற்று அம்மரபைப் பேணியவகையில் திருக்கோயில் வளர்ச்சி பெற்று சைவபக்திஇயக்கம் வளம்பெற உதவியமை குறிப்பிடற்பாலது. சைவ சித்தாந்த வழியைப் பின்பற்றியவன்.
சைவபக்தி இயக்கத்திற்குப் பல்லவ மன்னர்கள் பேருதவியாக இருந்தனர். பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புகளை விரிவுபடுத்தியமை. அரண்மனைச் சடங்குகள் ஆலயச் சடங்குகளாக மாற்றமடைந்தமை போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

(06 புள்ளிகள்)

ஆ) நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்

சைவசமய நாயன்மார்கள் நால்வரும் சைவ சமயத்திற்குத் தலைமைதாங்கி சைவபக்திஇயக்கம் வளம்பெறச் செய்வதில் பெரும் பங்கு வகித்தனர். தத்தமது அரிய பணிகளால் சைவபக்தி இயக்கத்திற்கு உந்து சக்தியாக விளங்கியமை.

சைவ சமயத்தின் பல்வேறு விடயங்களைப் பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தினர். சிவனது பரத்துவம், சிவ சின்னங்களைப் போற்றுதல், சைவ வாழ்வு போன்ற அம்சங்கள் குறிப்பிடற்பாலன.

இறை வழிபாட்டில் நாயன்மார்கள் ஈடுபட்ட வேளை பல்வகை உறவு முறைகளைக் கடைப்பிடித்தனர்.
இவர்களது அரிய பணிகளால் ஆலய வழிபாடும் சைவ சாதனைகளாகப் பரிணமித்து சைவ பக்தி இயக்கம் வளம்பெறலாயிற்று.
தமது திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடிச் சைவ பக்தி இயக்கத்திற்கு உர மூட்டினர். பண்ணுடன்"நாதன் நாமம் நமச்சிவாயவே'. எனப் பாடிய திருஞானசம்பந்தரும் ' என்கடன் பணி செய்துகிடப்பதே' எனப்பாடிய திருநாவுக்கரசரும் பக்தரைப் பணிந்து பாடும் சுந்தர மூர்த்தி நாயனாரும் இறை வழிபாட்டில் ஈடுபட்டு சைவ பக்தி இயக்கம் வளம்பெற பக்தியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றினர்.
நாயன்மார்கள் அற்புதங்கள் மூலம் சமயப் பணிகளைச் செய்ததுடன் சமூகப் பணிகளையும் முன்னெடுத்தனர்.
இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தவும் மக்களுக்குச் சமயக் கருத்துக்களைக் கூறவும் ஆலய வழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும். இசையுடன் கூடிய பாடல்கள் பெரிதும் உதவின.
சமூக சமத்துவம் பக்தி இயக்கத்தில் முக்கியத்துவம் பெற்றது.

(07 புள்ளிகள்)

(இ) திருக்கோயில் வழிபாடு

சைவ சமயத்தில் சைவபக்தி இயக்கம் வளம்பெறுவதற்கு ஏதுவாக ஆலய வழிபாடு, இறைவன் பெருமை, சிவ சின்னங்களின் சிறப்பு, சைவ நாற்பாதங்களின் மகிமையும் சாதனையும், குருலிங்க சங்கம வழிபாட்டின் மகத்துவம் போன்றவை அமைந்தன.
பல்லவ மன்னர்கள் பல்வகை ஆலயங்கள் அமைத்து இறை பக்தியும் திருக்கோயில் வழிபாடும் வளம்பெற உதவினர். சைவ சமயம் உறுதியுடன் வளர்ச்சி பெற்றதனால் அதன் பயனாய் திருக்கோயிற் பண்பாடு மேன்மை பெற்றது.

'திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறணியாத திருவில் ஊரும்........
ஊரல்ல அடவி காடே'

என அப்பர் பாடித் திருக்கோயில் வழிபாட்டை வளம்படுத்தினார். "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன். உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என அப்பர் பாடி திருக்கோயில் வழிபாட்டின் பெருமையைப் போற்றிய வகையில் சைவ பக்தி இயக்கம் மேனிலை அடைந்தது.

தலையே நீ வணங்காய்; கண்காள் காண்மின்களோ; செவிகாள் கேள்மின்களோ; மூக்கே நீ முரளாய்; வாயே வாழ்த்து கண்டாய்; நெஞ்சே நீ நினையாய் கைகாள் கூப்பித் தொழீர் கடி மாமலர் தூவி நின்று ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றியென்னாத இவ்ஆக்யையாற் பயனென்? கால்களாற் பயனென்? கறை கண்டனுறை கோயில் கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்.
இறுமாந்திருப்பன்கொலோ;
தேடிக் கண்டு கொண்டேன்.
என்ற திருப்பதிகங்கள் மூலம் அப்பர் சைவபக்தி இயக்கத்திற்கு வளமூட்டி மக்களை அந்நெறியில் ஆற்றுப்படுத்தினார். அதன் வழி திருக்கோயில் வழிபாடு மேன்மையுற்று மக்கள் பயனடைந்தனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது"
இறைவனது "நமச்சிவாய" என்ற மந்திரம் எனப் போற்றி திருக்கோயில் வழிபாட்டிற்கு வழியமைத்துக் கொடுத்தவர் திருஞானசம்பந்தர் ஆவார்.

(07 புள்ளிகள்)
(06+07+07= 20 புள்ளிகள்)

03. இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிவரும் பணிகள் பற்றி பரிசீலிக்குக.
அ) சைவ பரிபாலன சபை
ஆ) சைவ வித்தியா விருத்திச் சங்கம்
இ) அகில இலங்கை இந்து மாமன்றம்

அ) சைவ பரிபாலன சபை

இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அரிய பணியாற்றிய நிறுவனங்களுள் சைவ பரிபாலன சபையும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது.

கி.பி.19ம் நூற்றாண்டில் அதாவது 1888 ல் தாபிக்கப்பட்டது. இச்சபை தாபிப்பதில் முன்னின்று விளங்கியவர் நாவலருடைய மாணவரும் மருகருமாகிய வித்துவ சிரோன்மணி திரு ந.ச.பொன்னம்பல பிள்ளை அவர்களாவர். இச்சபை நல்லை நாவலரின் எண்ணக்கனவின் நிறைவாகும். 1889 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சபையினை நிறுவியமை குறிப்பிடத்தக்கது. பின்னர் 5 வருடங்களின் பின் கல்லூரி நிருவாகத்திடம் சபை ஒப்படைக்கப்பட்டது.

இச்சபை தோற்றம் பெறுவதற்கான காரணங்கள் பலவாகும் மேலைத்தேசத்தவரின் ஆட்சியில் சைவசமயம், தமிழ்மொழி பெரிதும் பாதிக்கப்பட்டு இந்துப்பண்பாடு நலிவுற்றது. நாட்டை ஆள்பவர்களினால் சமய ஆசாரங்கள்ஒதுக்கப்பட்டமை, போர்த்துக்கேயரால்புராதனசைவஆலயங்கள்பாதிப்புக்குள்ளாக்கப்பட்டமை, ஒல்லாந்தருக்குப் பின் ஆங்கிலேயர் சமய சுயாதீனத்தை ஓரளவு வழங்கியவிடத்தும் அவர்களது ஆதரவுடன் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவந்த மிசனரிமார் சைவ சமய விருத்திக்குத் தடையாக இருந்தமை.

சைவப்பிள்ளைகள் சைவ சமயச் சூழலிற் கற்க முடியாத வகையில் தடையேற்பட்டமை, மிசனரிமாரின் சைவ சமயத்திற்கு எதிராக கண்டனம், பிரசாரம் மேற்கொண்டமை, சைவ சமயச் சின்னங்களை அவமதித்தமை, சைவ சமயத்தவரை அஞ்ஞானிகள் எனக் குறிப்பிட்டமை.

இக் காரணங்களை எதிர் கொள்ள சைவ பரிபாலனசபை உருவெடுத்தது. இச்சபையின் பணிகளில் சிறப்பானவை
சைவர்களிடையே சைவ சமயத்தைப்பேண கிராமந் தோறும் சமயப் பிரச்சாரங்களை மேற்கொண்டமை.
நாயன்மாரின் குருபூசைகளை நடாத்தி சைவ பக்தியையும் குரு பக்தியையும் போற்றியமை.
ஆலயங்களில் புராணபடனம், சைவ சமயபாட வகுப்புக்கள் மற்றும் சைவ சமயப் போட்டிகள் நடாத்தி மாணவர்களை ஆற்றுப் படுத்தியமை.

மகாநாடுகள், ஆண்டுவிழா, பரிசளிப்பு விழா போன்றவற்றை நடாத்தி சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்தமை.
1947 ல் சபைக்குச் சொந்தக் காணி பெற்றுக் கட்டடம் அமைத்து சபையின் செயற்பாடுகளை விரிவாக்கியமை.
சைவசமய நூல்களை மறுபிரசுரம் செய்து வெளியிட்டமை. “இந்து சாதனம்” என்ற பத்திரிகை மூலம் மக்களிடையே சமய அறிவை மேம்படுத்தியமை.

இச்சபையின் இவ்வரிய பணிகள் இற்றைக் காலம் வரை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் தொடர்வது குறிப்பிடத்தக்கது. நாவலரது சமய சிந்தனைகளின் வழி சபை செயற்படுவது குறிப்பிடத்தக்கது. இப் பணிகள் மூலம் இந்துப் பண்பாடு வடபகுதியில் மாத்திரமன்றி இலங்கை முழுவதும் வளர்ச்சி பெற சபையின் பணிகள் மக்களுக்கு உதவி வருகின்றன.

(07 புள்ளிகள்)

ஆ) **சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

சைவ சமய வளர்ச்சிக்காகவும் அதனைப் பாதுகாப்பதற்காகவும் இச்சங்கம் 1923 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பியர் காலத்தில் நலிவுற்ற சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்பது இச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

சேர் பொன் இராமநாதன், இந்து போர்ட் சு. இராசரெத்தினம் போன்றோரே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களாவர்.

**சங்கத்தின் முக்கிய பணிகள்**

சைவப் பாடசாலைகள் அமைத்தல், சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல்.

சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், சைவப் பண்பாட்டைப் பேணிக்காத்தல்.

சைவ சமயப் பரீட்சைகள் நடாத்துதல்.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களிலும் புத்தளம்,வவுனியா, முல்லைத்தீவு சிலாபம், பதுளை, நாவலப்பிட்டி,கலகா போன்ற இடங்களிலும் பாடசாலைகளை நிறுவியமை.

சைவத் தமிழ்ப் புலமையை வளர்க்கும் நோக்கில் திருநெல்வேலியில் சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலை அமைத்தமை, கைத் தொழில் நிலையங்களை நிறுவி பொருளாதார மேம்பாட்டிற்கு உதவியமை, சைவ ஆதரவற்றவர்களுக்கான விடுதி நிறுவியமை, இந்துப் பண்பாட்டு அம்சங்களாகிய இலக்கியம், இசை, நடனம், நாடகம் வளர உதவியமை சைவப் பெரியோர்களையும் கலைஞர்களையும் கௌரவித்தல்.

(06 புள்ளி)

இ **அகில இலங்கை இந்து மாமன்றம்**

இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய மாவட்டங்களில் உள்ள இந்து மத மன்றங்களின் உறுப்புரிமையுடன் செயற்படும் நிறுவனரீதியான ஒரு அமைப்பாகும்.

ஜயவருடம் தைமாதம் (1955) தைப்பூச நன்னாளில் சைவச் சான்றோர்கள் ஒன்று கூடி அகில இலங்கை இந்து மாமன்றத்தை நிறுவினர்.

பல பெரியார்கள் இம்மன்றத்தின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் விளங்கி மாமன்றத்தை வழிநடத்தியுள்ளனர். முகாமைத்துவக் குழு மாமன்றச் செயற்பாடுகளுக்கும் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவி வருகிறது. கொழும்பு தலை நகரில் மன்றத்திற்கான புதியதொரு கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு பிரார்த்தனை மண்டபத்தில் அருள் மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜ பெருமானுக்கு 1966 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதியன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதிலிருந்து மாமன்றத்தின் தலைமையகம் புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. கொழும்பு சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் இக்கட்டடம் அமைந்துள்ளது.

**மன்றத்தின் நோக்கம்**

இந்து தர்மம் சார்ந்த அறிவை மேம்படுத்துதல்.

இந்து சமயம் சார்ந்த அறிவினை இளம்தலைமுறையினரிடையே மேம்படுத்துதல்.

இந்து ஆலயங்கள் இந்து சமய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஆலோசனை வழங்கல்.

இந்து தாபனங்களை நன்கு செயற்படச் செய்யும் வகையில் அவற்றிற்கிடையே ஐக்கியத்தை வளரச் செய்தல்.

அல்லற்படும் மக்களின் துயர் துடைத்து அவர்களுக்கேற்ற உதவி வழங்குதல்.

ஏழை மாணவர்களுடைய கல்வி தடையின்றித் தொடர ஏற்ற உதவிகளை வழங்குதல்.

பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை இனங்கண்டு அவர்களது பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கு உதவுதல்.

நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.

**மன்றத்தின் பணிகள்**

மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய அப்பியாசப் புத்தகங்கள் நாடளாவிய ரீதியில் தேவைப்படும் நிலையில் உள்ளவர்களுக்கு வழங்குதல்.

நாடளாவிய ரீதியில் அறநெறிக் கருத்தரங்குகளை நடத்துதல்.

சமய தீட்சை வழங்கும் நிகழ்ச்சிகளை வழங்குதல்

கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதிக்கு உதவுதல்

சிவதொண்டர் அறநெறிப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.
"இந்து ஒளி" சஞ்சிகை மற்றும் இந்து நாகரிகம் சார்ந்த நூல்களை வெளியீடு செய்தல்.
சமய நிறுவனங்களுக்கு இல்லம் மற்றும் மண்டபங்கள் அமைக்க உதவுதல், நிதியுதவி வழங்குதல்.
மகாநாடுகள் நடாத்தி நூல்கள் மூலம் மகாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பிரசுரித்து வெளியிடல். அண்மையில் வைரவிழா வெளியீடாக நூல் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.
யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் சமயக் கருத்தரங்குகளைச் செய்தல்.
இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல்.

இத்தகைய பணிகள் மூலம் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமயப் பணிகளால் இந்து சமூகமும் நிறுவனங்களும் ஆலயங்களும் பயனடைந்து வருகின்றன. யாழ்ப்பாணம் நல்லூரிலும் மன்றத்தின் பணிகளை முன்னெடுக்க இந்து மாமன்றக் கட்டடத்தினை அமைத்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்திற்கு உதவிகள் வழங்குதல். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்குதல். இந்துக்கள் மத்தியில் இலவசத் திருமணங்களை நடத்துதல் போன்றனவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

(07 புள்ளிகள்)

(07+06+07= 20 புள்ளிகள்)

04. **"உபநிடதங்கள் இந்து தத்துவ வளர்ச்சியின் கருவூலங்கள்" என்பதனை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**

அ) உபநிடதங்கள் எழுந்த காலச் சூழல்
ஆ) உபநிடத மகா வாக்கியங்கள்
இ) இந்து தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்களிப்பு

**அ) உபநிடதங்கள் எழுந்த காலச் சூழல்**

வேதங்களின் ஞானகாண்டப்பகுதியாக விளங்கும் உபநிடதங்கள் கி.மு 6 ஆம் நூற்றாண்டை முன்னெல்லையாகக் கொண்டு தோற்றம் பெற்றவையாகக் கருதலாம். உபநிடதங்கள் எழுந்த காலம் தத்துவ சிந்தனைக் காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

வேதங்களின் நிறைவுப் பகுதியாகிய உபநிடதங்கள் வேத சிந்தனைகளின் முடிவை (சாரத்தினை) வெளிப்படுத்துவதனால் வேதாந்தம் எனப்படுகின்றன.

உபநிடதங்கள் பிரஸ்தான திரயங்களில் முதன்மையானவை.
பிரமம் பற்றிய அறிவும் தன்னைப் பிரமமாக உணர்வதுமாகிய உபநிடத உரையாடல் குருவுக்கும் மாணவனுக்குமிடையே நடை பெற்றதை உபநிடதங்கள் காட்டி நிற்கின்றன.

(05 புள்ளிகள்)

**ஆ) உபநிடத மகா வாக்கியங்கள்**

உபநிடதம் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை நல்குவது என ஆதிசங்கரர் விளக்கம் தந்துள்ளார். உயர் தத்துவக் கருத்துக்களை கொண்டனவே உபநிடதங்கள். பிரம,ஆன்ம விசாரணைகளுக்கு உதவக்கூடிய மகாவாக்கியங்கள் உபநிடதங்களில் காணப்படுகின்றன.

தத்துவமஸி – நீ அது ஆகின்றாய்
அகம்பிரம்மாஸ்மி – நான் பிரமம்;
அயம் ஆத்மா பிரம்ம – இந்த ஆத்மா பிரமம்;
ஸர்வம் கலு இதம் பிரமம் – அனைத்தும் பிரமமே

ஸோ(அ)கம் அஸ்மி – நானே அவன்
பிரக்ஞானம் பிரமம் – அறிவே பிரமம்
போன்ற மகா வாக்கியங்கள் தத்துவச் சிந்தனைகளுக்கு முன்னோடியாக அமைகின்றன.

பிரமம், ஆன்மா, ஆன்ம விடுதலை பற்றிய உண்மைகளை அறியவும் உணரவும் இவை உதவுகின்றன. பகவத்கீதை உபநிடத மகாவாக்கியங்களில் ஒன்றாகிய தத்துவமஸி என்பதன் விளக்கமாக உள்ளமை சிறப்பம்சமாகும். பிற்கால தத்துவ சிந்தனையாளர்களாகிய சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோர் தத்தமது கோட்பாட்டினை நிறுவ மகா வாக்கியங்கள் அடிப்படையாக அமைந்தன. வேதாந்த தத்துவ மரபுகள் இவற்றின் மூலம் வளம்பெற்றன. பிரம்மமும் ஆன்மாவும் அடிப்படையில் ஒன்று என்ற தத்துவத்தை மகா வாக்கியங்கள் விளக்குகின்றன.

(07 புள்ளிகள்)

இ **இந்து தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்களின் பங்களிப்பு**

உபநிடதங்கள் பிரம்ம அறிவை மட்டுமன்றி ஒருவனது உள்ளம் அமைதி பெறவும் ஞான உணர்வை அடையவும் வழிகாட்டுகின்றன.
ஆன்மாவுக்கு பிரம்ம ஞானத்தை ஏற்படுத்தக் குருவின் வழிகாட்டல் அவசியம் என்பதையும் இந்து தத்துவ தரிசனத்தில் குருவின் பெருமையை எடுத்துக் காட்டும் உரையாடல்களாகவும் இவை விளங்குகின்றன.

உபநிடதங்கள் பல. அவை ஒரே பிரமத்தைக் குறிப்பிடுவதோடு நிர்க்குண, சகுணப் பிரம நிலைகளையும்

விளக்குகின்றன. வேதம் கூறும் "ஏகம் சத்" என்பதே உபநிடதங்களில் மகாவாக்கியங்களாக விரிவடைந்து பிரம்ம விசாரணைக்கு முன்னோடியாக அமைந்ததாகக் கூறுவர்.

மேலான சத்தியப் பொருளாகிய பிரமத்தை அடையச் செய்யும் சிந்தனைகள் குருசீட உரையாடல்கள் என்பன உப கதைகள், வினாவிடைகள், செய்முறைகள், ஐயங்கள் ஆகிய உத்திகளின் அடிப்படையில் உள. இவை ஞானம் பெற்ற ரிஷிகளின் அனுபவ வெளிப்பாடாகும். உபநிடதங்களில் 108 உபநிடதங்கள் பிரதானமானவை. உபநிடத உரையாடல்களும் சிந்தனைகளும் தத்துவ எழுச்சிக்கான வினா விடையாக உள்ளன.

மேலான உண்மைப் பொருளின் தன்மை யாது? (சாந்தோக்கியம்) கல்வியாலும் செல்வத்தாலும் ஞான நிலை இறவா நிலை அடையலாமா? (பிருகதாரணியகம்)
உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாவின் நிலை யாது? (கட உபநிடதம்)
யாகக் கிரியைகளின் தத்துவார்த்த உண்மையை வெளிப்படுத்த எழுந்த உபநிடதங்கள் ஞானமின்றிக் கிரியையைச் செய்ய முடியாது. அது போன்று கிரியா கடமையின்றி ஞானமும் பெறமுடியாது என்ற கருத்தை விபரிக்கின்றன.

பிருகதாரணியக உபநிடதத்தில் தத்துவ ஞானம் நோக்கிய ஒருவனுடைய உபாசனைகளையும் வேண்டுதல்களையும் கொண்ட பாடல் துன்பத்தில் இருந்து விடுதலை பெறுதலை நோக்கமாகக் கொண்டது.

"என்னைத் தீமையில் இருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக"
"என்னை இருளில் இருந்து ஒளிக்கிட்டுச் செல்வாயாக"
"என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக"

உபநிடதங்கள் கூறும் தத்துவ சிந்தனைகள் பிரமம் பற்றியதாக உள்ளன. பிரம தத்துவத்தைக் கூறும் போது பிரமத்தை அறியும் ஞான மார்க்கம் பற்றியும் அதற்கான வாழ்வியல் முறைகளையும் கூறுகின்றது.

பிரமம் தானாகவே இயங்குவது; உலகின் மூலகாரணம் ஆனது. முண்டக உபநிடதம் சிலந்தியானது தன்னிடம் இருந்து நூலை உண்டாக்கி அதைப்பற்றி நிற்கின்றது. அது போலவே பிரமம் தன்னிடம் இருந்து உலகைப் படைத்துள்ளது எனக் கூறும். பிருகதாரணியகத்தில் இந்த உலகின் அடிப்படை யாது எனும் வினா இடம்பெறுகின்றது.
பிரமம் சொல்லால் வருணிக்க முடியாதது. பிரமம் மூன்று தன்மைகளால் விளக்கப்பட்டுள்ளது. அவை சத்தியம், ஞானம், ஆனந்தம் என்பன. இவற்றினால் பிரமம் உண்மையானது; பேரறிவானது; எல்லையில்லா ஆனந்தம் உடையது என்பதும் வலியுறுத்தப்பட்டது.

பிரமத்தில் இருந்து உலகம் தோன்றியதற்கு பல உதாரணங்கள் கூறப்பட்டுள்ளன.
உபநிடதங்கள் பிரமத்தை அடையும் வழிகளைக் கூறுகின்றன. பிரமத்தை பிரம உபாசனையில் வழிவந்த ஞானத்தினால் அறிந்து கொள்ள முடியும். சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய ஞான வழிகள் கூறப்பட்டுள்ளன. ஞானத்தினால் ஒருவன் பூரண விடுதலை பெறுவான். ஆன்மா பற்றியும் உபநிடதங்கள் விபரிக்கின்றன. ஆன்மா வேறு உடல் வேறு என்பது வண்டியில் கட்டிய குதிரை போன்ற உதாரணத்தால் விளக்கப்படுகின்றது. காண்பது கண்ணல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு ஆன்மாவே காண்கின்றது. பிரமம் பரமாத்மா ஆன்மா ஜீவாத்மா உடம்பினுள்ளே ஆன்மா உருவமற்ற உணர்வாக விளங்குகின்றது. ஆன்மாக்கள் தாம் செய்த வினைகளுக்கேற்ப பல்வேறு பிறவிகளைப் பெறுகின்றன. நெற்கதிர் உதிர்ந்து மீண்டும் முளைப்பது போன்ற உதாரணம் மூலம் ஆன்மாவின் மறுபிறவி விளக்கப்படுகிறது.

ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகளில் பற்றுக்களில் இருந்து விடுபடுதல் முக்கியமானது.
உபநிடதங்களுக்கு தத்தமது கோட்பாடுகளை நிறுவ உரை எழுதி சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோர் இந்து தத்துவ வளர்ச்சியில் மேன்மையான தொண்டாற்றி உள்ளனர். அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் போன்ற கோட்பாடுகள் உருவாகின. சைவ சித்தாந்தக் கோட்பாட்டிற்கும் உபநிடதங்கள் உதவி உள்ளன வேதாந்தத்தெளிவாம் சைவ சித்தாந்தம் என்ற தொடர் குறிப்பிடத்தக்கது. ஆன்மவிடுதலையே உபநிடதம் கூறும் உன்னத உபதேசம்.

(08 புள்ளிகள்)

(05+07+08= 20 புள்ளிகள்)

05. **சோழர்காலத்தில் ஏற்பட்ட கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விபரிக்குக.**

(அ) சோழப் பெரு மன்னரின் பங்கும் பணியும்
(ஆ) கோயிற் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள்
(இ) சிற்பங்கள்

**அ) சோழப் பெருமன்னரின் பங்கும் பணியும்**

சோழ மன்னர்கள் சைவநெறியில் தீவிர ஈடுபாடும் அபிமானமும் உடையவர்களாய் விளங்கினர். அதன் காரணமாய் அந்நெறியின் வளர்ச்சிக்கும் அது சார்ந்த கோயிற் கட்டடக்கலை வளர்ச்சிக்கும் பேராதரவு வழங்கினர். ஏனைய கலைகளையும் ஆலயங்களை மையப்படுத்தியதாக வளர்த்தனர்.

சிவபாதசேகரன், திருநீற்றுச்சோழன், போன்றவிருதுப்பெயர்களைஅவர்கள்சூடியிருந்தமைசைவசமயத்தின் மீதும் திருக்கோயிலில் விளங்கும் சிவன்மீதும் கொண்டிருந்த பக்தியை வெளிப்படுத்துவனவாகும்.
மானியங்கள் வழங்கியும், வணிகர் மடம் அமைத்தும் தமது பணிகளை விரிவுபடுத்தினர்.

நிலையான ஆட்சியாக நாடு வளம்பெற்றதோடு சோழர்காலம் பொற்காலமெனச் சிறப்பிக்கப்படும் அளவுக்கு மன்னர்கள் பெற்ற வெற்றிகளும் சமயத்தின் மீதிருந்த நம்பிக்கையும் கலைத்துவமிக்க பிரமாண்டமான புதிய ஆலயங்கள் அமைப்பதற்கும் ஏற்கனவே இருந்த பழைய ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் ஏதுவாயின. ஆலயக் கிரியைகளை மரபின் வழி செய்யவும் ஏதுவாயின.

திருமுறைகள் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
நடராஜ சின்னம் சோழ அரசது சின்னமாகியது. ஆலயங்களுக்கு தானம், மானியங்கள் வழங்கினர்.

(06 புள்ளிகள்)

ஆ) **கோயிற் கட்டடக் கலையின் சிறப்பம்சங்கள்**

தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் சோழப் பேரரசின் காலம் உன்னத வளர்ச்சிக் காலமாக விளங்கியது.
பல்லவர் அமைத்த அடித்தளத்தில் மகோன்னதமான கட்டடக்கலை மரபொன்றைச் சோழப் பெருமன்னர் உருவாக்கினர்.

விஜயாலயன், பராந்தக சோழன், முதலாம் இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலங்களில் கோயில்கள் பல சிறப்பாக எழுச்சி பெற்றன. விஜயாலய சோழேச்சரம், ராஜராஜேஸ்வரம், கங்கை கொண்ட சோழேச்சரம், தாராசுரம் ஐராவதேஸ்வரம், திரிபுவனம், கம்பஹரேஸ்வரர் போன்ற கோயில்கள் மன்னரால் அமைக்கப்பட்டன. பாடல் பெற்ற ஆலயங்கள் இக்காலத்தில் கற்றளிகளாக மாற்றம் பெற்றன.

சோழப் பெருமன்னரது ஆட்சிக்காலப் பகுதியில் இடம்பெற்ற கோயிற் கட்டடக்கலையின் பிரதான வளரச்சி நிலைகளை மேல்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் (கி.பி850 - 950 வரை)

இக்காலத்தில் எழுந்த ஆலயங்களின் அளவு சிறிதாக அமைந்தது. அவை பல்வர்காலக் கட்டடக்கலைப் பாணியை அடித்தளமாகக் கொண்டவை. விஜயாலய சோழேச்சரம், ஆதித்த ஈஸ்வரம், மூவர் கோயில், திருச்சிராப்பள்ளி
ஸ்ரீ நிவாஸ நல்லூரில் உள்ள கோரங்கநாதர் கோயில் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை ஆகம மரபு சார்ந்தவை.அதிஷ்டானம், அர்த்தமண்டபம், விமானம், தேவ கோஷ்டம் ஆகிய அம்சங்களால் கட்டடக்கலை வனப்புடன் வளர்ச்சி பெற்றது.

2. பராந்தகன் முதல் இராஜராஜன் வரையுள்ள காலம் (கி.பி. 900 - 1000 வரை)

இக்காலப் பகுதியில் ஆலயங்களை பெரிதாக அமைக்கும் வழக்கம் ஏற்படலாயிற்று. பாடல் பெற்ற தலங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. தூண் அமைப்புக்களில் அலங்கார வேலைப்பாடுகள் இடம்பெற்றன.

3. ராஜராஜன் காலம் முதல் முதலாம் குலோத்துங்கனுக்கு முற்பட்ட காலம் (கி.பி 1000 - 1070 வரை)

இக்காலத்தில் ஆலயக் கட்டுமானம் மிகப்பிரமாண்டமானதாக வளர்ச்சியுற்ற நிலை குறிப்பிடற்பாலது. தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற கோயில்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

உயரமான அழகுமிகு விமானம் சிறப்பம்சம். தூபி, தூண்கள், மண்டபங்கள் சுற்றுப்பிரகாரங்கள் என்பன எழில் வாய்ந்தவை.

4. முதலாம் குலோத்துங்கன் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையான காலம் (கிபி 1070 - 1250 வரை)

தாராசுரம்,ஐராவதேஸ்வரம் கம்பஹரேஸ்வரர் ஆகிய ஆலயங்களை இக்காலப்பகுதிக்குரியவனவாகக் குறிப்பிடலாம். இங்குள்ள சிற்பங்கள் கோயிற் கட்டடக் கலையை மெருகூட்டுவனவாக உள்ளன.

(08 புள்ளிகள்)

**இ) சிற்பங்கள்**

சோழர்காலச் சிற்பங்கள் பல திறத்தன. பெருமளவிலானவை கல்லிலும் உலோகத்தினாலும் அமைக்கப்பட்டன. இக்காலச் சிற்பங்கள் அவற்றின் கலைத்துவச் சிறப்பினால் உலகலாளாவிய ரீதியில் நுண்கலை ரசிகர்களது பாராட்டைப் பெற்றுள்ளன.

தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம், விமானங்களில் கருங்கற் சிற்பங்கள் விமானங்களை அழகுபடுத்துவன.

புராணக் கதைகளை பிரதிபலிக்கும் சிற்பங்கள் விமானங்களை அலங்கரிக்கின்றன.

ராஜராஜேஸ்வரம் கோயிலின் உட்புறச் சுவர்களில் சிவ தாண்டவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

ஐராவதேஸ்வரத்தின் விமானம், தேவகோட்டம், சுவர் போன்ற பகுதிகளில் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் பல சிற்பங்களைக் கொண்டுள்ளதால் " சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்" என வர்ணிக்கப்படுகிறது.

சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைவான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(06 புள்ளிகள்)

(06+08+06= 20 புள்ளிகள்)

06. **'ஈழத்துச் சைவ சமய வளர்ச்சியில் சைவப் பெரியார்களாகிய காசிவாசி செந்திநாதையரினதும் சுவாமி விபுலானந்தரினதும் பணிகள் அளப்பரியவை'** ஆராய்க.

**காசிவாசி செந்திநாதையர்**

யாழ்பாணத்தில் குப்பிளான் என்னும் கிராமத்தில் 1848 ல் பிறந்தார். நல்லூர் சம்பந்தப் புலவர் நாவலர் பெருமான ஆகியோரிடத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணம் பயின்று தமது புலமைத்துவத்தைப் பெற்றவர். யாழ்பாணம் வெஸ்லியன் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி வல்லுனர்.

நாவலரின் வழியைப் பின்பற்றி சொற்பொழிவாற்றியும் அச்சியந்திரசாலை அமைத்தும் அரிய நூல்களை வெளியிட்டும் துண்டுப் பிரசுரங்கள் ,கண்டன உரைகள், கண்டன மறுப்புக்களை வெளியிட்டும், சைவ சமய நூல்கள் கட்டுரைகள் எழுதியும் மொழிபெயர்ப்புகளைச் செய்தும் சைவ சமய வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர் காசிவாசி செந்தி நாதையர். செந்திநாதையர் தமிழ் வித்தியாசாலையில் ஆறு ஆண்டுகளும், ஆங்கில வித்தியாசாலையில் ஒரு ஆண்டும் பணிபுரிந்து நாவலரின் நன்மதிப்பைப் பெற்றவர். இப்பணிகள் மூலம் சைவ சமயஞ் சார்ந்த இளம் பிள்ளைகள் பயனடைந்தனர்.

நாவலரோடு பிரசங்கம் செய்யும் இடங்களில் குறிப்பெடுத்தல், நாவலர் சிவபூசை செய்யும் போது திரு முறைகளைப் பண்ணோடு ஓதுதல் மூலம் சைவ சமய வாழ்வியலுக்கு ஏற்ற அனுபவம் பெற்றதனால் சைவ சமயத்தை வளர்த்தெடுக்கும் திறன் பெற்றவர்.

வாழ்நாளில் பெரும் பகுதியைத் தமிழ்நாட்டில் கழித்தவர்.

பல்வேறு சமயப் பணிகளை மேற்கொண்டவர்.

இவர் காசியில் சில காலம் வாழ்ந்தமையினால் "காசிவாசி" என அழைக்கப்பட்டார்.

இணுவில் நடராசையரிடம் சைவசித்தாந்தத்தையும் இந்தியாவில் அங்கிருந்த சாஸ்திரிகளிடம் வேத வேதாங்கங்களையும் கற்றுத் தேர்ந்தவர்.

**அவரது சைவ சமய வளர்ச்சிக்கான பணிகள்**

இந்து சாதனத்தில் சமயக் கட்டுரைகளை எழுதியவர்.

"வைதீக சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதியவர்.

அச்சியந்திர சாலை அமைத்து சமயப் பணியாற்றினார்.
1906 செந்தி நாத சுவாமி அச்சியந்திர சாலையை நிறுவினார்.
பிரம சூத்திரத்திற்குச் சைவ சித்தாந்தக் கண்ணோட்டத்தில் நீல கண்ட சிவாச்சாரியார் எழுதிய நீல கண்ட பாடியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தமையானது இவரது படைப்புக்கள் அனைத்திற்கும் மகுடம் போன்றது.
சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு இரு ஆராய்ச்சி முகவுரை எழுதியவர்.

கண்டன உரை கண்டன மறுப்புக்கள் வெளியிட்டு சைவ சமயத்தைப் பாதுகாத்தவர்.
ஞானபோத விளக்கச் சூறாவளி, வச்சிரதண்டம் என்பன குறிப்பிடத்தக்கவை.
நூல்கள் வெளியீடு - 45 க்கு மேற்பட்ட நூல்கள் ஞானாரத்தினாவளி, சிவஞானபோதவசனாலங்காரதீபம், சைவ வேதாந்தம், கந்தபுராண நவநீதம், தேவாரம்வேத சாரம் போன்றவை சில. 21 நூல்கள் மட்டுமே கிடைக்கப்பட்டுள்ளன.

ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சித்தாந்த சைவத்திற்கும் அதன் நடைமுறைகளுக்கும் எதிராகப் பிறசமயத்தவர் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளைக் கண்டித்து மதமாற்றம், சிவநிந்தனை ஆகியவற்றை அறிவுசார் வழிகளில் வலுவுடன் எதிர்த்தும் சித்தாந்த சைவத்தைப் பாதுகாத்து சைவ சமய வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய சைவப் பெரியார் காசிவாசி செந்தி நாதையர் ஆவார்.

(10 புள்ளிகள்)

**சுவாமி விபுலாநந்தர்**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்குத் தெற்கே உள்ள காரைதீவில் 1892 ஆம் ஆண்டு பிறந்தவர்.
இளமையில் தக்கவர்களிடம் கல்வி பயின்று ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றவர்.
ஆறுமுகநாவலரிடத்து விபுலாநந்த அடிகளுக்கிருந்த மதிப்பினை நாவலர் மீது அவர் பாடிய நாவலர் மெய்க்கீர்த்திமாலை எனும் நூல் மூலம் அறியலாம். அவரைப் பின்பற்றிச் சைவசமயத்திற்கு அரும் பெரும் தொண்டாற்றியவர்.
நாவலர் சைவமும் தமிழும் வளரத் தில்லையில் தொண்டாற்றியவர்.
பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியர் டிப்ளோமா பயிற்சியைப் பெற்றவர்.

1916 ல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர்.
1920 இல் லண்டன் B.SC. விஞ்ஞானப் பட்டதாரி. பல பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றியவர். யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றியவர்.
1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்துச் சுவாமி சிவானந்தரால் "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டார்.

1924 இல் ஞான உபதேசம் பெற்றுச் சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சா நாமம் பெற்றார்.
துறவு வாழ்வு மானிட நேயத்தை வளர்க்க உதவியது.
தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் வல்லுனர். சமயப் பணி, கல்விப் பணி,கலைப்பணி, நூலாசிரியர் பணி, உரையாசிரியர் பணி, பதிப்பாசிரியர் பணி, சமூகப்பணி என பல துறைகளில் பணியாற்றி சமயத்தத்துவக் கருத்துக்களை சாதாரண மக்களும் விளங்கும் வண்ணம் இலகு நடையில் விளக்கி அரும் பணியாற்றியவர்.
இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலிய சமயப் பெரியார்களை மதித்துப் போற்றி அவர்களது போதனைகளையும் பணிகளையும் முன் மாதிரியாகக் கொண்டு சமய வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றியவர்.

இந்துக்கள் கல்வி பெறுவதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டுச் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை வலியுறுத்தி சென்னைக் கல்விக் குழுவுக்குச் சிபார்சு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக வித்திட்டவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இந்துபோர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து இராமகிருஷ்ண மிசனுக்குரிய கல்விச் சட்டத்தை உருவாக்கியவர். இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பல நிறுவி நிருவகித்தவர். அநாதை ஆச்சிரமம் நிறுவி அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தியவர். பாடசாலைகளில் வெள்ளிக் கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்துதல், பக்திப் பாசுரப் பாராயணம், பண்ணிசைப் பயிற்சி, சைவ சமய வகுப்புக்கள் ஆகியவற்றை வார இறுதியில் நடாத்தியமை அவரது சமய வளர்ச்சிக்கான பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

சமயக் கல்வியை இளைஞர்களுக்குப் போதித்தல் அவரது புதிய திட்டமாகும். சமயஞ்சார் கல்விப் பணி முதன்மை பெற்றது.
இசைத் தமிழில் மிகுந்த ஈடுபாடு.
குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுக நாவலர் என்பவற்றை எழுதியவர். நாடகநூல் - மதங்க சூளாமணி, இசைத் தமிழ் - யாழ்நூல். இயல் இசை நாடகம் என முத்தமிழிலும் வல்லவர் என்பதால் "முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர்" எனப் போற்றப்பட்டார்.

இவரது உரையாசிரியப் பணி, பதிப்பாசிரியப் பணி குறிப்பிடத்தக்கவை.
சமூகப் பணிகளில் எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது என மக்கள் சேவை செய்தவர்.

1947 இல் இறைபதம் அடைந்தார். இவரது சமாதி கல்லடி உப்போடையில் உள்ளது.
"சித்தி புத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில் நிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ" எனவும். "வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ" எனவும் சுவாமி விபுலானந்தர் பாடி சைவ சமயத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

(10 புள்ளிகள்)

(10+10 = 20 புள்ளிகள்)

07. **தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரீகம் வளம்பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க**

அ) இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்கள்
ஆ) சமய வளர்ச்சி
இ) கலைகள்
ஈ) இலக்கியங்கள்

அ) **இந்து நாகரீகம் பரவியமைக்கான காரணங்கள்**

தென்கிழக்காசியா என்ற சொற்றொடரானது ஆசியாவின் தெற்கே உள்ள நாடுகளையும் தீபகற்பங்களையும் குறிக்கும். அவற்றில் தாய்லாந்து, மியன்மார், மலேசியா, கம்போடியா, சம்பா என்பவை நாடுகளாகவும் இந்தோனேசியா (யாவா, சுமாத்திரா ,போர்ணியோ) பாலித்தீவு என்பவை தீவுகளாகவும் விளங்குகின்றன.

வணிகம், அரசியல் ஆகிய தொடர்புகளால் இந்துநாகரிகம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியது. விவாகத் தொடர்புகளும் அரச உறவுகளும் வலுவடைந்தன. அரச சபைகளில் பிராமணர்கள் முதன்மை பெற்றனர். இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் காரணமாகவே இத்தகைய குடியேற்றங்கள் ஏற்பட்டன. அந் நாடுகள் சுவர்ண பூமியாக விளங்கியதால் வர்த்தக நடவடிக்கைகள் பெருகின.

இக்காரணங்களால் இந்திய மக்கள் தென்கிழக்காசிய மக்களுடன் வாழ்வியல் அடிப்படையில் கலந்து கொண்டனர். குப்தர் காலம் தொடக்கம் சோழர் காலம் வரை உள்ள காலப்பகுதி இந்தியப் பண்பாடு பரவிய காலமாகும்.பௌத்த கலாசார பரவலும் இப்பண்பாடு பரவ காரணமாயிற்று.

அரசர்கள், வணிகர்கள் இந்தியாவில் இருந்து குடியேறியமையால் பிராமணர் நெறி, கலை அம்சங்கள், இந்து இலக்கிய மரபுகள், சமயம், வாழ்க்கை அம்சங்கள், அரசியல் முறைமைகள் அனைத்தும் பரவின. சுருங்கக் கூறின் இந்துப் பண்பாட்டு அம்சங்கள் அனைத்தும் பரவின எனலாம்.

இந்து அரசியல் முறை சார்ந்த பரம்பலும் சமயத் தொடர்பும் பற்றிய விடயங்களில் அரச சபைகளில் அர்த்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

அர சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேக விழாக்கள் இடம்பெற்றன.
அரச சபைப் புரோகிதர் "இராஜகுரு" என அழைக்கப்பட்டார்
அரசர்கள் பிராமணர்களுக்குத் தானம் வழங்கினர். ஜாவாவில் பூர்ணவர்மன் சிவநெறி தழுவி ஆயிரம் அந்தணர்களுக்குத் தானம் வழங்கினான்.
பல்லவ சோழ அரச வம்சங்கள் "வர்மன்" என்னும் பெயர்களுடன் பரவியமை. சயாம் நாட்டின் தலைநகரில் மணசீ கிராமம் பகுதியில் இந்துக் குடியிருப்பு காணப்பட்டது.
அங்குள்ள விஷ்ணு கோயில் அவனி நாரணம் என்னும் திருக்குளத்துடன் காணப்படுகிறது.

(05 புள்ளிகள்)

ஆ) **சமய வளர்ச்சி**

கோயில்கள் -
கம்போடியா - அங்கோவாட் சிவாலயம்.
சம்பா - பத்திவர்மன் பத்திரேஸ்வரர் கோவில்.
யாவா - பிரம்பனான் கோயில், பொரதூர் விநாயகர் ஆலயம்,
தாய்லாந்து - வாட்போங் கோயில் ,பொரதூர் அரச சபையில் திருவெம்பாவைப் பாடல் இடம் பெற்றது.
மலேசியா - பத்துமலைக் கோயில் - முருகன் ஆலயம்
(தைப்பூசம் மிகவும் சிறப்பு வாய்ந்தது)

இந்து சமயச் சடங்குகள் - பட்டார குரு வழிபாடு, திருமுறை ஓதுதல், பஞ்சாங்கம் பார்த்தல், புனித நீராட்டு விழா, அர்ச்சனை செய்தல், கார்த்திகை பௌர்ணமி, மார்கழி ஊஞ்சல் குறிப்பிடத்தக்கன.

(05 புள்ளிகள்)

இ) **கலைகள்**

பௌத்த கோயில்களில் இராமாணயச் சிற்பங்கள், இராமாயணக் கதை சார்ந்த ஆடல் மரபு, கூத்துக்கள், செங்கல் கருங்கல் கொண்டு கட்டடம் கட்டும் பழக்கம்.
இந்தியாவில் இருந்து ஆந்திரப் பிரதேச கலைமுறை, கலிங்க கலைமுறை, பல்லவ கலை முறை என்பன பின்பற்றப்பட்டன.
இத்தகைய அம்சங்களினால் இந்து நாகரிகம் தென்கிழக்காசிய நாடுகளில் வளம் பெற்றமை குறிப்பிடற்பாலது.

(05 புள்ளிகள்)

ஈ) **இலக்கியம்**

மகாபாரதக் கதை, அருச்சுன விவாகம், பாரத யுத்தம் என்னும் பெயர்களில் பரப்பப்பட்டுள்ளது.
இராமாயணக் காதை இராமர் கதை என்று தாய்லாந்தில் புகழப்படுகிறது. பாலித் தீவில் இராம கவசம் என்னும் பெயரில் இந்நூல் புகழ் பெற்றது.
கலை நூலாகிய நாட்டிய சாஸ்திரம் பக்தி இலக்கியமாகிய திருவெம்பாவை,

திருப்பாவை,முதலியனவும் தென்கிழக்காசிய நாடுகளில் செல்வாக்கடைந்தன.
யாவா நாட்டில் பல வட மொழிச் சாசனங்கள் காணப்பட்டமை குறிப்பிடற்பாலது.

(05 புள்ளிகள்)

(05+05+05+05+ = 20 புள்ளிகள்)

08. **மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

அ) கதிர்காமம்
ஆ) விஷ்ணுவின் அவதார தத்துவம்
இ) குப்தர்காலக் கலைகள்
ஈ) சைவ சித்தாந்தத்தின் தனித்துவமும் சிறப்பும்
உ) குருகுலக் கல்வி
ஊ) கண்ணகி வழிபாடு

(அ) **கதிர்காமம்.**

இலங்கையிலுள்ள வரலாற்றுப் பெருமை வாய்ந்த முருகத் தலங்களுள் கதிர்காமம் சிறப்புமிக்கது. முருக வழிபாட்டிற்குரிய ஆலயங்களின் வரிசையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றினாலும் புகழ் பெற்றுத் திகழும் இத்தலம் ஈழநாட்டின் தென்பால் அமைந்துள்ளது. இத்தலத்தின் பெயர் தொடர்பாகப பல்வேறு கருத்துக்கள்அறிஞரிடையே காணப்படுகின்றன.

கதிர்காமக் கடவுளுக்கு வழங்கப்படும் பெயர்களுள் கதிர்காம சுவாமி,கதிரை வேலன்,கந்தக் கடவுள்,ஆறுமுகப் பெருமான் ஆகிய பெயர்கள் குறிப்பிடத்தக்கன. இவ்வாலயம் ஊவா மாகாணத்துப் புத்தல பிரிவில் தீயனகம என்ற காட்டில் மாணிக்ககங்கையின் இடது கரையில் அமைந்துள்ளது. இத்தலத்திற்குப் புராணவரலாறு உண்டு. முருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கோடு எழுந்தருளிய போது கதிர்காமத்தையடைந்து மாணிக்க கங்கையருகிற் பாசறை வகுத்து வீற்றிருந்தார் என்றும் சூரபன்மனை வென்ற பொழுது கதிர்காமக்கிரியில் நவகங்கா தீர்த்தமுண்டாக்கி சிந்தாமணி ஆலயத்தில் வீற்றிருந்தார் என்பது புராணவரலாறு.
தக்ஷிணகைலாச புராணத்திலும் இத்தலம் பற்றிக் குறிப்புள்ளது. பௌத்த அரசர்கள் இத்தலத்தோடு பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர்.
கதிர்காமத்தில் வருடந்தோறும் நான்கு திருவிழாக்கள் நடைபெறும்.

ஆடி, ஆவணியில் நடைபெறும் திருவிழா 16 நாட்கள் நடைபெறும். மக்கள் கதிர்காம யாத்திரையை பக்தியுடன் மேற்கொள்வர். எல்லாச் சமயத்தவர்களும் வழிபடும் தெய்வத்தன்மை வாய்ந்தது கதிர்காமம். பௌத்தர்கள் கதரகம தெய்யோவை வணங்குவதில் பக்திபூர்வமாக ஈடுபடுவர். முருகப்பெருமான் சிறியதொருகோவிலில் திரைமறைவில்தான் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.
திரைமறைவில் இருந்தாலும் திசையனைத்தையும் ஆள்கின்றார் எனப்பக்தர்கள் நம்பிக்கையுடன் வழிபடுவர்.வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கதிர்காமத்திற்குச் செல்வதற்கான காரணம் கதிர்காமப்பெருமான் வள்ளியம்மையுடன் வீற்றிருந்து கண்கண்ட தெய்வமாக அடியார்க்கு திருவருள் பொழிவதனாலாகும்.
செல்லக் கதிர்காமம் இங்கு சிறப்புடையது. அருணகிரிநாதர் இத்தலத்தைத் திருப்புகழ் பாடல்களால் போற்றியுள்ளார்
அவரது வாக்கால் இத்தலத்திற்கு கதிர்காம, கதிருகாம, கதிரகாம எனப் பல பெயர்கள் வழங்கின என்பதை அறியமுடிகின்றது.

(05 புள்ளிகள்)

(ஆ) **விஷ்ணுவின் அவதார தத்துவம்**

வைணவத் தந்திரங்கள் கடவுளின் ஐந்து வடிவங்கள் பற்றிக் கூறுகின்றன.

1. யாவும் கடந்து நிற்கும் வடிவம். (பரம்)
2. கூட்டான வடிவம் (வியூகம்)
3. அவதார வடிவம் (விபவம்)
4. உள்ளார்ந்த வடிவம் (அந்தர்யாமித்துவம்)
5. விக்கிரக வடிவம் (அர்ச்சை)

விஷ்ணுவின் விபவ வடிவங்களே அவதாரங்கள்.
விஷ்ணுவிற்குரியபல அவதாரங்களில் முக்கியமானவை பத்து ஆகும்.
அவையாவன :

மச்சஅவதாரம்(மீன்), கூர்ம அவதாரம்(ஆமை), வராக அவதாரம் (பன்றி) நரசிம்ம அவதாரம் (மனித வடிவிலானசிங்கம்), வாமன அவதாரம்(குள்ளன்), பரசுராமன்,இராமன்,பலராமன்,கிருஷ்ணன்,கல்கி என்பன. பகவத்கீதையில் ஶ்ரீகிருஷ்ணன் அவதாரதத்துவம் பற்றிக் கூறுகின்றான். “எப்பொழுதெல்லாம் தர்மம் தாழ்ந்து அதர்மம் மேலோங்கி நிற்கின்றதோ அப்போது நான் ஒவ்வொரு யுகத்திலும் நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களைஅழிக்கவும் அவதரிப்பேன்” எனக் கூறுகின்றான்.
வைணவத்தில் எல்லாவகை நெறிகளிலும் நாராயணனின் பிரசன்னத்தை அனுபவித்திருப்பதே முடிவான இலட்சியமாகக் கொள்ளப்படுகின்றது.
கடவுளின் கருணை கிடைப்பதற்கும் பக்தி செலுத்துவதற்கும் இந்த அவதாரங்கள் பக்தர்களுக்கு உதவுகின்றன.

இலட்சியத்தையடைய அவை துணை புரிகின்றன.
பாகவத புராணம் விஷ்ணுவின் அவதாரங்கள் பற்றிக் கூறுகின்றது.
அவதாரம் என்ற சொல் குறிப்பிட்டதொரு உருவத்தில் அவதரிக்க இறைவன் இறங்கி வருதலைக்குறிக்கும்.இது விஷ்ணுவின் உயர்வைக்காட்டும் தத்துவமாகும்.
தென்னாட்டு வைணவத்தலங்களில் விஷ்ணுவின் அவதாரவடிவங்கள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன
வடஇந்தியாவில் குப்தர் காலத்து தியோகா தசாவதாரக்கோயில் அவதார மகிமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.
(05 புள்ளிகள்)

(இ) **குப்தர் காலக் கலைகள்**

வடஇந்தியாவில் வளம் பெற்ற இந்துப்பண்பாட்டு வளர்ச்சியிலும் வரலாற்றிலும் குப்தர் காலம் பொற்காலம் எனபெருமை பெறுகின்றது. ஏறக்குறைய கி.பி 318 முதல் கி.பி 570 வரையிலான காலப்பகுதி வடஇந்தியாவில்இவர்களது காலமாகும். இக்காலத்திற்குரிய பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் குப்தர் காலக் கலைகள் பற்றியறியஉதவுகின்றன. குப்தர்காலக் கலைகளின் வரிசையில் கட்டடக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை போன்றவை குறிப்பிடற்பாலன.
குப்தர் காலம் இந்துக்கலைகள் வளம் பெற்ற காலமாகும்.குப்தர் காலப் பேரரசர்கள் குப்தர் காலக் கலைவளர்ச்சிக்குபெரும் ஈடுபாடு காட்டினர்.
இந்தியாவில் வளம் பெற்ற இந்துக்கோயிற்கட்டடக்கலை மரபுகளுள் வடஇந்தியா சார்ந்த நாகர கலைப்பாணியின் தொடக்கத்தையும் வளர்ச்சியையும் குப்தர்காலக் கோயில்கள் காட்டிநிற்கின்றன உத்தரப்பிரதேசம்,பீஹார், மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் குப்த மன்னர்கள் பலவகையான கோயில்கள் அமைத்து கட்டடக்கலைக்குப்பெருமை சேர்த்தனர்.அவ்வாறான கோயில்களுக்கு உதாரணமாக உதயகிரிகுகைக்கோயில்,தியோகா தசாவதாரக்கோயில்,பூமரா சிவன் கோயில்,குட்டாரா பார்வதி கோயில் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பஞ்சயதனகோயில் அமைப்பு குறிப்பிடத்தக்கது.
குப்தர் காலச்சிற்பக்கலையின் சிறப்பை இக்காலத்துக்கோயில்களில் இடம்பெற்ற கடவுளர்களது சிற்பங்களும் வேறு கலைவடிவங்களும் எடுத்துக்காட்டுகின்றன.
இராஜஸ்தான் கோயில் வழிபாடுகளில் காணப்படும் கிருஷ்ண அவதாரச்சிற்பங்கள்,உதயகிரி,வடமதுரை போன்ற இடங்களில் காணப்பட்ட விஷ்ணுவின் அவதாரச்சிற்பங்கள் உதாரணங்களாகும்.
குட்டாரா பார்வதி கோவில் சக்திவடிவம்,பூமரா சிவன் கோயில் மகாதேவனது வடிவம் குறிப்பிடத்தக்கவை.
அஜந்தா குகைகளும் சில குப்தர்கால ஓவியக்கலை வளர்ச்சியைக் காட்டிநிற்கின்றன.
இக்குகைளிலுள்ள கற்றூண்கள் வெவ்வேறு கலையம்சங்களுடன் காணப்படுகின்றன.
அஜந்தாவின் 1ம் 2ம் 3ம் 4ம் 16ம் 17ம் இலக்கக்குகையோவியங்கள் குப்தர் காலத்தவையாக அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.
கோயில் திருவிழாக்களில் நடனமாதர்கள் நடனமாடினர். நடனக்கச்சேரி சிற்பம் ஒன்றுமுள்ளது.
பௌத்தசமயம் சார்ந்த கலைமரபுகள் வளம் பெற்றதையும் குறிப்பிடலாம்.

(05 புள்ளிகள்)

(ஈ) **சைவ சித்தாந்தத்தின் தனித்துவமும் சிறப்பும்**

சைவத்தின் முடிந்த முடிபு என்ற சிறப்புக் கொண்ட சைவ சித்தாந்தத்திற்குரிய பிரமாணங்கள் வேதம் பொது ஆகமம் சிறப்பு எனவும் அவற்றை வேறுபாடு காணாமல் ஏற்றுக்கொண்ட சிறப்பும் குறிப்பிடற்பாலது.
மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு அடுத்து சைவ சித்தாந்த தனித்துவத்திற்கு சான்றாவன அட்டப்பிரகரணங்கள், உரை நூல்கள் உதவும் சிறப்பு.

சைவ சித்தாந்தம் பத்துப் பிரமாணங்களை விளக்கி அவற்றை பிரத்தியட்சம்,அனுமானம்,ஆப்த வாக்கியம் எனும்மூன்றினுள் அடக்கி அவற்றினூடாக முப்பொருள்களாகிய பதி,பசு,பாசம் ஆகியவற்றின் உண்மையை நிலை நாட்டிய சிறப்பு. இறைவன்,ஆன்மா,ஆணவம்,கன்மம்,மாயை ஆகிய விளக்கங்கள் மூலம் ஆன்மா விடுதலை பெறும் வழிகளை வகுத்துக் கூறும் சிறப்பும்,தனித்துவமும் சைவ சித்தாந்தத்திற்கே உரியதாகும்.
ஆன்மீக வாழ்வு மேன்மையுற சைவசித்தாந்தம் கூறும் வழிமுறைகள் சிறப்பானவை.
ஆன்மாக்கள் மலபந்தம் நீங்கி இறைவனை அடைதலே பக்குவ நிலை அடைதல் எனப்படும்.
தீட்சை ஆன்மிக வாழ்வு மேன்மையுற உதவும்.

ஆன்மிக வாழ்வு மேன்மையுற சைவ சித்தாந்தம் கூறும் வழிமுறைகள்

1. சைவ நாற்பாதங்கள் – சரியை,கிரியை,யோகம்,ஞானம் தொடர்பான அற ஒழுக்கங்கள்
2. குரு,லிங்க,சங்கம வழிபாடு
3. இறைபக்தி ,ஆலயசேவை,அடியார் வழிபாடு ,பஞ்சாட்சரஜபம்,சிவசின்னங்களைப் போற்றுதல், திருக்கோயில் வழிபாடு.
4. திருவருளை முதன்மையாகப் பிரார்த்தித்து சேவை செய்தல்.

இருவினைஒப்பு, மலபரிபாகம், சக்திநிபாதம் ஆகிய படிமுறைகளில் ஆன்மிக வாழ்வு மேன்மையுறும்.
இறைபணி நிற்றல், அகப்பூசை, புறப்பூசை, ஆன்மா முத்தியடைதல் என்பது இறைவனது திருத்தாளை அடைதல் – தாடலைபோல் கூடுதல்.
" வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" என்ற தொடர் அத்தத்துவத்தின் தனித்துவத்தைக் காட்டும்
மணிவாசகரின் "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க"என்ற சிவபுராண வரிகள் திருத்தாளின் சிறப்பினைக் கூறும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பிக்கும் சக்தி நமச்சிவாய மந்திரத்திற்கேஉரியது என சம்பந்தர் கூறுவது சைவசித்தாந்தத்திற்குப் பெருமை சேர்ப்பது.
மண்ணில் நல்ல வண்ணம் வாழ எமக்கு வழிகாட்டும் சிறப்பு சைவ சித்தாந்தத்திற்கே உரியதாகும்.

(05 புள்ளிகள்)

(உ) குருகுலக்கல்வி

சமயம்,ஆன்மிகம், ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்புப் பெறுவதே புராதனக் கல்விப் பாரம்பரியத்தின்இலட்சியமாகும்.
இந்துக்கல்விப் பாரம்பரியம் குருகுலக்கல்வியை அடிப்படையாகக் கொண்டது.
குருகுலக்கல்வி: சீடன் குருவின் ஆச்சிரமத்தை நாடிச் செல்லுதல்.
குருகுலக் கல்வியானது சமயநெறி, இறை நம்பிக்கை,குருபக்தி, ஆச்சிரம வாழ்வு,ஒழுக்கம்,ஆன்மிகம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது.
புராதன இந்துக்கல்வி மரபு வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டது.
வேத உபநிடதம் கூறும் கல்வி மரபு செவிவழிக் கல்வியாகும்
உபநிடதங்களில் குருகலக்கல்வியின் உயர்நிலையைக் காணலாம்.
இருக்கு வேத பிரமச்சரிய சூக்தம் மாணவர்கள் குருவின் இல்லம் நாடிச் சென்று குருகுலவாசம் செய்து கல்வி கற்றதனை விபரிக்கின்றது.
குருகுலத்தில் குருவும் மாணாக்கரும் நெருங்கியிருந்து தத்துவஞான விசாரணைகளில் ஈடுபட்டனர்.
உப +நி + ஸத் என்பதே குருவின் அருகிலே சீடன் நெருங்கி அமர்ந்து குருகுலத்தில் கல்வி கற்றலைக் குறிக்கும். குருவைத் தெய்வமாக மதித்து அவரோடு தங்கியிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து குருவின்வழிகாட்டலில் கல்வி கற்றல் குருகுலவாசமாகும். கல்விக்கால முடிவில் குருவுக்குத் தட்சணை வழங்குவது இக்கல்வியின் முக்கிய அம்சம்.

குருகுலத்தில் குருபக்தி, குருதர்மம் சிறப்பாகப் போற்றப்பட்டது.
குருகுலக்கல்வியின் நிறைவில் குரு மாணவனுக்கு வழங்கும் அறிவுரை பற்றி தைத்திரிய உபநிடதம் கூறுகின்றது.
சத்தியத்தைப்பேசு; தர்மத்தைக் கடைப்பிடி; குருவைத்தெய்வமாகப் போற்றுக ; பெற்றோரைத் தெய்வமாகப்போற்றுக;
விருந்தினரைத்தெய்வமாகப்போற்றுகபோன்றஅறிவுரைகள்குருகுலக்கல்விபெற்றமாணவனுக்குவாழ்வில் பெரிதும் உதவின.

(05புள்ளிகள்)

(ஊ) கண்ணகி வழிபாடு

இந்த சமய மரபில் கிராமிய வழிபாட்டில் கண்ணகி வழிபாடுசிறப்பிடம் பெற்றது.
இவ் வழிபாடு தமிழர் வாழும் பிரதேசங்களில் குறிப்பாக மட்டக்களப்பு, வன்னி, மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் சிறப்புற்று விளங்குவதற்கு இவவிடங்களில் எழுச்சி பெற்ற கண்ணகி ஆலயங்களே சான்று.
இவ்வழிபாடு மட்டக்களப்பில் வழிபாட்டிற்குரிய ஐதீகங்களுடன் சிறப்பாக இடம்பெறுவது தனித்துவமானது.
கண்ணகி வழிபாட்டிற்குச் சிறப்புச் சேர்க்கும் ஆலயங்களின் வரிசையில் அங்கணாமைக் கடவை கண்ணகி அம்மன்,வற்றாப்பளை கண்ணகி அம்மன் , மட்டக்களப்பு காரைதீவு கண்ணகியம்மன் , செட்டிப்பாளையம் கண்ணகியம்மன், ஆரையம்பதி கண்ணகியம்மன்,மந்திகைக் கண்ணகியம்மன், யாழ்ப்பாணம் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகியம்மன், புங்குடுதீவு கண்ணகியம்மன், நாகர் கோயில் கண்ணகியம்மன் போன்ற ஆலயங்களில் வைகாசி மாதத்தில் சிறப்பாக பொங்கல்,திருக்குளிர்த்தி வழிபாடுகள் நடைபெறுவது குறிப்பிடற்பாலது.

இலங்கையில் கண்ணகி வழிபாடு பரவுவதற்குக் காரணமாக இருந்த மன்னன் முதலாம் கஜபாகு எனச் சிங்கள நூல்கள் கூறும், மட்டக்களப்பு கண்ணகி கோயில்களில் பாடப்படுவது "உடுக்குச் சிந்து" ஆகும். இதில் கண்ணகி வழிபாட்டின்

தொன்மை பற்றியறிய உதவும் பாடல்கள் உள.

கண்ணகி வழக்குரை, கண்ணகி காவியம், சிலம்பு கூறல், கோவலனார் கதை என்பன கண்ணகி வழிபாட்டிற்குரிய மூலத்தைக் குறிப்பிடுவன.

(05 புள்ளிகள்)

(05+05+05+05 = 20 புள்ளிகள்)